ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1578/14 - 2008 දෙසැම්බර් 02 වැනි අඟහරුවාදා - 2008.12.02
*1578/14 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 02 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ், காலி மாநகர சபையின் மாநகர முதல்வரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்**

கேட்டு விலகல் காரணமாக காலி மாநகர சபையின் மாநகர முதல்வரின் பதவி வெற்றிடமாயிருக்கின்றதாதலாலும் ;

காலி மாநகர சபையின் மாநகர முதல்வர் வீரநாராயண செனவிரத்ன கெலும், எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியைச் சேர்ந்தவராக இருக்கின்றாரோ அந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளர் அத்தகைய கட்சியைச் சேர்ந்தவரும் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுத்தப்படவேண்டிவருமான காலி மாநகர சபையின் உறுப்பினரைத் தீர்மானிக்குமாறு மேற்படி கட்டளைச்சட்டத்தின் 65அ(1) என்னும் பிரிவின் கீழ் என்னால் தேவைப்படுத்தப்பட்டார் ஆதலாலும் ;

மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஆளொருவராக திரு. அ. அ. அலெக்சாண்டர் மெத்சிறி த சில்வா என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளார் ஆதலாலும் ;

இப்போது காலி மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. அ. அ. அலெக்சாண்டர் மெத்சிறி த சில்வா என்பவர், காலி மாநகர சபையின் மாநகர முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

ஏ. பீ. ஐ. த சில்வா,
தெரிவத்தாட்சி அலுவலர்,
காலி மாநகர சபை.

தேர்தல்கள் அலுவலகம்,
காலி,
2008, நவெம்பர் 27.

12 - 497

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.